# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 66/ந/2025
நாள் 02.06.2025

திரு.R,மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி, திருமங்கலம்.

2) திருமதி D. சத்தியா,
க/பெ. லேட் திரு. எம். சீனிவாசன்,
சீனிவாசா தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி
உணவுக்கூடம், கோட்டைப்பட்டி, சேடப்பட்டி,
மதுரை மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவரின் 09.11.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.11.2024 அன்று பெறப்பட்டு, 66/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவர் தனது 09.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட மதுரை ரோடு ஸ்ரீனிவாசா நகர் கதவு எண்.411–ல் இயங்கி வரும் ஸ்ரீனிவாசா ரெசிடென்சி (Lodge) தங்கும் விடுதி கட்டிடம் மற்றும் சுந்தரவள்ளி A/C உணவக கட்டிடம் அரசு விதிகளின்படி நான்கு புறமும் இடைவெளி இடம் (set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி தங்கும் விடுதியில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால் தீயணைப்பு மீட்பு வாகனம் மற்றும் ஆம்புலன்ஸ் சென்று வர இயலாதவாறு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீனிவாசா ரெசிடென்சி லாட்ஜ் கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும்,கூடுதலாகவும் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் ஆகும். ஆனால் மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககத்தில், கட்டிடத்திற்கு திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கும், விதிகளுக்கும் மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தை கண்காணிக்கத் தவறிய முன்னாள், இந்நாள், சம்பந்தப்பட்ட திருமங்கலம் நகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் மற்றும் விதிகளுக்கு மாறாக கட்டப்பட்ட ஸ்ரீனிவாசா ரெசிடென்சி (Lodge) கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56,

57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work Notice/Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal demolition notice வழங்கியும் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.W.P.(MD) No.3140/2019 உத்தரவு நாள் 12.12.2023 உத்தரவின்படியும், விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 12.03.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டுள்ளார்.

3. எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையாளரின் 12.03.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களது 12.03.2025 தேதிய மேற்கண்ட புகார் மனு சம்பந்தமான விசாரணை அறிவிப்பு கடந்த 19.03.2025 அன்று எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது.

நகராட்சி நிர்வாக மேல் அதிகாரிகள் உத்தரவுக்கிணங்க 2024–25 ஆம் வருட இறுதி வரி வருவாய் வசூல் சம்பந்தமான நகராட்சியின் அனைத்துப் பகுதிக்கும் அலுவலர்களுடன் சென்று வரி பாக்கிகளை வசூல் செய்வதில் ஈடுபட்டிருந்த நிலையில், நகராட்சியில் உள்ள ஆவணங்களைப் பரிசீலனைகள் செய்து எங்கள் தரப்பு ஆட்சேபனை மற்றும் விபரங்கள் குறித்த தேதிக்குள் தங்கள் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க இயலவில்லை.

புகார் மனுவில் கண்டுள்ள திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட சர்வே வார்டு D பிளாக் எண்.6, கதவு எண்.411, டவுன் சர்வே எண்.22/1 மதுரை ரோடு, திருமங்கலம் முகவரியில் உள்ள சீனிவாசா ரெசிடென்சி தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி உணவுக்கூடம் சம்மந்தப்பட்ட கோப்பு விபரம் ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கண்ட புகார் மனுவில் கண்ட சீனிவாசா ரெசிடென்சி தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி உணவுக்கூட கட்டடம் சம்மந்தமாக WP(MD) No.13676/2021என்ற வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் டிவிசன் பெஞ்சில் கட்டிடத்தின் உரிமையாளர் திரு. எம். சீனிவாசன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட வழக்கில் கோப்பு ஆவணங்கள் அரசு வழக்கறிஞர் மற்றும் நகராட்சி வழக்கறிஞரிடம் இருப்பது தெரியவருகிறது. எனவே அனைத்து விபரங்கள் பெற்றவுடன் எங்கள் தரப்பு விளக்கம் மற்றும் ஆட்சேபணைகளை உரிய ஆவணங்களுடன் தாக்கல் செய்கிறோம் என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். ஆகவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணையாளர் அவர்கள் முறையீட்டு மனு எண். 66/2025 நாள் 12.03.2025க்கான ஆட்சேபணை மற்றும் விளக்கத்தினை ஆவணங்களுடன் சமர்ப்பிக்க ஏதுவாக 30 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. இரண்டாவது எதிர்மனுதாரரான காலஞ்சென்ற திரு. எம். சீனிவாசன் என்பவரின் மனைவி திருமதி D. சத்தியா என்பவரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 03.04.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"1. I humbly submit that it is brought to my knowledge that one Mr. R.Mayilsamy has presented a complaint before the Tamil Nadu Local Bodies Ombudsman office against the Commissioner, Thirumangalam Municipality and the same has been numbered as 66/M/2025.

2. My husband Mr. Srinivasan, the petitioner in W.P.(MD)No. 13676 of 2021 passed away on 23.10.2023. I have filed impleading petition to implead myself and the same is pending.

3. The Hon'ble Madurai Bench of Madras High Court extracting paragraph 9 of my husband's affidavit has granted an order of status quo against the impugned order dated 22.06.2021 and further more had impleaded the District Superintendent of Police, Vigilance and Anticorruption, Madurai.

4. Mr. Mayilsamy with an aim to defeat the case filed before the Hon'ble High Court focusing himself as a social worker had lodged this complaint. The issue in respect of the building construction is subjudiced before Hon'ble High Court. In this background there cannot be a parallel probe on the same issue before learned ombudsman forum.

5. My husband during his life time has been put on threat, suppressed by the official on demand of bribe. Due to all kinds of stress created by the officials and their sponsored social workers he got demised at the age of 47.

6. Mr. Mayilsamy claiming himself as a social worker has not chosen any other building except the building shown in the above referred complaint. This would show his motive, ill advice of the officials, who are facing the case before the court.

7. The complaint before your office and the notice issued by your office is being widely spread in social media for best reason known for the social worker.

I request your good office to take note of the case pending before Hon'ble Madurai Bench of Madras High Court. If necessary in interest of Justice I may be permitted to get implead myself as party before your forum to establish my case" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரின் புகார் மனு, முதலாவது எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இரண்டாவது எதிர்மனுதாரரான சீனிவாசா ரெசிடென்சி தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி உணவுக்கூடத்தின் உரிமையாளரான காலஞ்சென்ற திரு. எம். சீனிவாசன் என்பவரின் மனைவி திருமதி D. சத்தியா என்பவரின் கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைகிளையில் மனுதாரர் காலஞ்சென்ற திரு. சீனிவாசன் என்பவரால் தொடரப்பட்டுள்ள வழக்கு எண். WP (MD) No. 13676/2021 மற்றும் WMP (MD) No. 10617 & 10618 of 2021 நிலுவையில் உள்ளதாக திருமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இரண்டாவது மனுதாரரான சீனிவாசா ரெசிடென்சி தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி உணவுக்கூடத்தின் உரிமையாளரான காலஞ்சென்ற திரு. சீனிவாசன் என்பவரின் மனைவி திருமதி D. சத்தியா என்பவரின் கடிதம் வயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, திங்கள் ஜுன் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஆர். மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2) திருமதி D. சத்தியா,
க/பெ. லேட் திரு. எம். சீனிவாசன்,
சீனிவாசா தங்கும் விடுதி மற்றும் சுந்தரவள்ளி உணவுக்கூடம்,
கோட்டைப்பட்டி, சேடப்பட்டி,
மதுரை மாவட்டம்.

3) ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி, மதுரை மாவட்டம்.

4) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

2/6/25
செயலாளர்